# ஈரோடு மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம்
# ஜம்பை பேரூராட்சி

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வேலைகள் 2021 – 22
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க.எண்: 24/2022** **நாள்:06.04.2022**

ஜம்பை பேரூராட்சியில் 2021–22ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இருக்கும் கீழ்க்கண்ட பணிகளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து 21.04.2022ந்தேதி வியாழக்கிழமை மாலை 3.00 மணி வரை நிபந்தனைகளில் கண்டுள்ளபடி ஜம்பை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் ஜம்பை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாளில் 20.04.2022ந் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணி வரை பட்டியலில் கண்டுள்ள தொகையை ரொக்கமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | டேவணித் தொகை 2ரூ ரூ. | ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை | மொத்தம் ரூ. (கலம் 5+6) | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 |
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–22** | | | | | |
| 1. | வார்டு எண். 8 ஜெ.ஜெ. நகரில் பழுதடைந்த தார்சாலையை கான்கிரீட் தளமாக மாற்றியமைத்தல் ( நீளம் 65 மீ) | 6.50 | 13000 | 1620 | 14620 | 30 நாட்கள் |
| 2. | வார்டு எண். 15, சின்னவடமலைபாளையத்தில் 60000 லிட்டர் OHT அமைத்து குடிநீர் வசதி செய்தல் | 15.00 | 30000 | 1620 | 31620 | 90 நாட்கள் |
| | வார்டு எண். 15 பெரியவடமலைபாளையம் பெருமாள் கோவில் தெருவில் பழுதடைந்த தார்சாலையை கான்கிரீட் தளமாக மாற்றியமைத்தல் ( நீளம் 80 மீ) | 12.50 | 25000 | 1620 | 26620 | 45 நாட்கள் |
| | | 34.00 | | | | |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர் ஜம்பை பேரூராட்சியில் பதிவு பெற்று ஆண்டு தோறும் புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. செலுத்தப்படும் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகையை ரொக்கமாகவோ / காசோலையாகவோ செலுத்த வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைக்குள் வைத்து உறையின்மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி டெண்டர் தேதி நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், ஜம்பை பேரூராட்சி என்ற முகவரி இட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையோ எவ்வித காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ, பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரமுண்டு.
6. வரப்பெற்ற முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.
7. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.20/— மதிப்புள்ள முத்திரை தாளில் உடன்படிக்கை எழுதித் தரப்பட வேண்டும்.
8. வேலை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும் அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அங்கீகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்பிற்கும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவார்கள்.
9. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும், மேலே கண்டுள்ள 8—ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரரின் வைப்புத் தொகைகளையும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.
10. குறிப்பிட்ட தேதியில் வேலை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாக கருதப்படும். பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
11. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்ததாரர்கள் சேகரித்திடல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் பேரூராட்சி பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.
12. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.
13. வேலை முடிந்த பின்னர் பட்டியலில் கீழ்க்கண்ட தொகையை கழித்து கொடுக்கப்பட்டு மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரித்தொகைப் பிடித்தம் | 2% |
| 3 | சரக்கு மற்றும் சேவை வரி | 12% |
| 4 | தொழிலாளர் நல நிதி | 1% |

14. வேலை முடிவுற்று பட்டியல் பெற்றவுடன் அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பிறகே ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்படும்.
15. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கையில் தடை ஏதும் இல்லை என முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.
16. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்பொழுது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் வேலை செய்ய வேண்டும்.
17. வேலைகள் சம்பந்தமாக இதர விபரங்கள் வேண்டுவோர், ஜம்பை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

இ. பாலசெல்வன்

செயல் அலுவலர்,
ஜம்பை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

பெறுநர்

ஜம்பை பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவரும்.

நகல்

1. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) ஈரோடு அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. தொகுதி உதவிப்பொறியாளர், ஜம்பை பேரூராட்சி.
6. செயல் அலுவலர்கள், அம்மாப்பேட்டை, நெரிஞ்சிப்பேட்டை மற்றும் அந்தியூர் ஆகிய பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
8. தலைவர், ஜம்பை பேரூராட்சி அவர்கள் மேஜைக்கு, தகவலுக்காக.